மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நான் குறிப்பிட்டேன். இப்படி முரண்பட்ட கருத்துக்குக் காரணம் என்ன என்று எதிர்க்கட்சித் தலைவர் ஒரு அளவோடு நின்று கேட்டிருக்கலாம். அது இல்லாத காரணத்தினால் அதற்கு பதில் வேறு வகையில் வந்து விடுகிறது. ஆகவே, வார்த்தைகளை நாம் சொல்கிற நேரத்தில் எண்ணிப் பார்த்துப் போடவேண்டும் என்பதை மன்றத்தில் இருக்கிற எல்லோருக்கும் சொல்லிக் கொள்கிறேன்.

"மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க செயற் குறிப்பு இருக்கிறது, உடனடியாக எடுத்துக்கொள்ள சாங்ஷன் இல்லை' என்பது எல்லாம் கொள்கை விளக்கம் ஆகாது. நிதி அமைச்சருடைய கருத்துக்கு முரண்பட்ட கருத்தை கல்வி அமைச்சர் அவர்களும் சொல்லியிருப்பதாக ஆகாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நிதி அமைச்சர் அவர்கள் காடிகாரிகலாகச் சொன்னதாகச் சொன்னார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் பாசிங் ரிமார்க்காகத்தான் சொன்னார்கள் என்கிறார்கள். இதுவே முரண்பட்டது இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி விரிவாகவே சொல்லப்பட்டுவிட்டது. முதலாவதாக இது கொள்கை விளக்கம் அல்ல. அப்படியே இருந்தாலும் இது அவையில்தான் அறிவிக்கப்படவேண்டும், வெளியில் அறிவிக்கக் கூடாது என்பதற்கு ரூல் எதுவும் இல்லை. அவையில்தான் அறிவிப்பது என்பது ஒரு மரபு. ஒரு கர்டிசி. விதிகளில் அதுபோன்ற நிலை இல்லை. ஆயினும் இது கொள்கை விளக்கமும் அல்ல. ஆகவே, எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பேரவையின் மரபிற்கு மாறான சொத்துகளை பயன் படுத்துவது குறித்து

THIRU K. VINAYAKAM : Sir, on another point of order. There are certain words which are known as parliamentary words and there are certain other words which are known as unparliamentary words. For instance, * * has been declared as an unparliamentary word and it should not be used in a public assembly like this. Tere is another expression * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விநாயகம், நீங்கள் உட்காருங்கள். இதிலே நீங்கள் சொல்லிய இந்த பேச்சிலேயே 'பாயின்ட் ஆப் ஆர்டர்" வருகிறது. * * * * என்று இந்த சொற்களை பயன்படுத்திப் பேசியதாலே இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வருகிறது. இந்தச் சொற்களும் ரெக்கார்டு ஆகக்கூடிய அளவுக்கு வரும்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

திரு. கே. விநயகம் : ரெக்கார்டு பண்ணுவீங்களோ, பண்ண மாட்டீங்களோ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபாநாயகர் நின்று கொண்டு பேசும்போது நீங்கள் நிற்கக்கூடாது. உட்காருங்கள்.

திரு. கே. விநயகம் : ஒவ்வொரு வாட்டியும் நீங்கள் எழுந்து நின்று விடுகிறீர்கள். நான் எப்படி உட்கார முடியும்?

It is very easy for the Chair to get up and ask me to resume my seat . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுதான் நான் எழுந்து நிற்கிறேன். அவையிலே நீங்கள் பேசிய பேச்சுக்கள் அத்தனையும் நீக்கினால் ஒழிய * * * என்ற சொற்களை நீக்க முடியாது.

திரு. கே. விநயகம் : * * * என்ற வார்த்தை...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையில் * * * என்ற வார்த்தை பார்லிமென்டரியா? இல்லையா என்று மட்டும் நீங்கள் கேட்டிருக்கவேண்டும்.

திரு. கே. விநயகம் : அதற்கு உங்கள் ரூலிங் தான் என்ன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமென்டரியா அன்பார்லிமென்டரியா என்பதை பேரவைத் தலைவர் முடிவு செய்வார்.

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) பரங்கிமலையிலுள்ள அனுதை விடுதியில் தேள் விழுந்த கஞ்சியை உட்கொண்ட சிறுவர்கள் மயக்கமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வை. சுவாமிநாதன் அவர்கள், பரங்கி மலையில் உள்ள அனுதை விடுதி ஒன்றில் ஆகஸ்டு 28-ம் தேதி தேள் விழுந்த கஞ்சியை உட்கொண்ட 5 சிறுவர்கள் வாந்தி எடுத்து மயக்கமடைந்ததின் காரணமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டதைப் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது பற்றி அவர் கருத்துக்களைச் சுருக்கமாக சொல்லுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, பரங்கி மலையில் உள்ள அனுதை விடுதி ஒன்றில் தேள் விழுந்த கஞ்சியை சாப்பிட்டதன் காரணமாக 5 பேர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான நிகழ்ச்சிகள் பல பொது இடங்களில் நடைபெறுவதும், விஷம் குடித்து பலர் சாவதும் அடிக்கடி நிகழக்கூடிய நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. அதிகாரிகள் இதிலே கவனம் செலுத்தி இருந்தால் இந்தக் கஞ்சியை அவர்கள் உண்ணுது தடுத்து இருக்க முடியும். பேப்பர்களிலே இது மாதிரி நிகழ்ச்சிகள் வெகு

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.